1984 பிப்ரவரி 23]

வருகின்றவர்களுக்கு, சொந்த பட்டா கிடையாது. ஆனால், இடைக்காலத்தில் இப்படி வாழ்ந்து கொண்டு வருகின்றவர்களுக்கு அவர்கள் பின்தங்கியவர்களாக இருந்தாலும், ஆதிதிராவிட மக்களாக இருந்தாலும், முற்போக்கு வகுப்பினராக இருந்தாலும் அவர்கள் வாழ்ந்து வருகின்ற இடங்களுக்கு பட்டா, கொடுக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்கெனவே இருந்தது. ஆனால், என்ன காரணத்தினாலோ கடந்த இரண்டு ஆண்டுகளாக அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, புறம்போக்கு நிலத்திலே வாழ்வது என்பது ஒன்று ; கிராம நத்தம் புறம்போக்கிலே வாழ்வது என்பது மற்றொன்று. வாழ்கின்ற இடத்திலே பட்டா போட்டு கொடுத்தால், அரசாங்கம் கொடுக்கின்ற கடன் உதவியைப் பெறுவதற்கு உதவியாக இருக்கும். அது அவர்களுக்கு உடனடியாகக் கிடைப்பதற்கு, அது திண்டிவனமாக இருந்தாலும் அல்லது மற்ற இடங்களாக இருந்தாலும், அவர்களுக்கு அந்த உதவி கிடைப்பதற்கு அரசு முயற்சி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய தேர்தல் அறிக்கையில், விரைவாக எல்லோருக்கும் பட்டா கொடுக்க வேண்டுமென சொல்லியிருக்கிறோம். அதன்படி, உங்களுக்குச் சொல்ல, வேண்டுமென்றால், சென்ற 1981–82-ல் 94,000 வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1982–83-ல் 1,49,000 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு அதையும் மிஞ்சிப் போகும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, வீட்டு மனைப் பட்டா கொடுப்பதிலே இந்த அரசு கண்ணும்கருத்துமாக இருந்து விரைவிலே கொடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொந்தகையில் வருவாய் ஆய்வாளருக்காக கட்டப்பட்ட குடியிருப்பு.

140—(* வினா எண். 19687)—திரு. க. பாரமலை : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை வட்டாரம் கொந்தகையில் வருவாய் ஆய்வாளருக்காகக் கட்டப்பட்ட கட்டிடம் முடிக்கப்பெறாமலும், கட்டிய கட்டிடமும் உபயோகப் படுத்த இயலாத நிலையிலும் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது குத்தகை வருவாய் ஆய்வாளர் குடியிருப்புப் பழுது பார்க்கப்பட்டு, அது இப்போதைக்கு முடிவுற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் வரை அது குடியிருப்புக்கு இலாயக்குள்ளதாக இருக்கவில்லை. அதில் யாரும் குடியிருக்கவில்லை. அமைச்சர் அவர்கள் இப்பொழுது குடியேறும் நிலையிலுள்ளது என்று தகவல் சொல்கிறார்கள். அது எந்த அளவுக்குச் சரியானது என்று தெரியவில்லை. என்றாலும், அதே மாதிரி பல அரசுக் கட்டிடங்கள் கட்ட ஆரம்பித்து முடியாமலேயே இருக்கிறதே என்ன காரணம் ? எந்த ஆண்டு துவக்கப்பட்டது ? இவ்வளவு காலதாமதமாவதற்கு என்ன காரணம் ? அதிகாரிகள் பொறுப்பா ? அல்லது கட்டிய ஒப்பந்தக்காரர்கள் பொறுப்பா? என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. ஆயிரக்கணக்கான கட்டிடங்களும் தாமதப்படுகின்றன. ஏதோ ஒன்றிரண்டு அப்படி தாமதப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால், 1978-லிருந்து இன்றைக்கு 1983 வரையிலும் வருவாய் ஆய்வாளர்களுக்கு 958 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி இது போன்று ஒரு சில இடங்களில் தாமதமாகியிருக்கிறது என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். 1979 ஆம் வருஷம் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. முதலில் திரு. சின்னசாமி என்பவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. 60 சதவீதம் கட்டி விட்டு, முடிக்காமல் விட்டு விட்டுப் போய்விட்டார். பிறகு திரு. பாலசுப்பிரமணியம் என்பவரிடம் கொடுக்கப்பட்டது. அவரும் பாதி கட்டிவிட்டுப் போய்விட்டார். அதற்குப் பிறகு இறுதியாக வேறொரு ஒப்பந்தக்காரருக்குக் கொடுத்து அது கட்டி முடிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதற்கான கோரிக்கை

141—(* வினா எண். 20863) : திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிளகாய், மல்லி, புளி, வெல்லம், வெல்ல சர்க்கரை, மஞ்சள், பூண்டு ஆகிய பொருட்களை உணவுப் பொருளாகக் கருதி விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமெனக் கேட்டு அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?